## இலங்கை புவிச்சரிதவியல் நிறுவனம் - 2014

இலங்கை புவிச்சரிதவியல் நிறுவனத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வருமானச் செலவினக் கூற்றுக்கள் தொடர்பான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2014 இன் 03 ஆம் இலக்க இலங்கை புவிச்சரிதவியல் நிறுவன (கூட்டிணைத்தல்) அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வினை மேற்கொள்வதன் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

### 1.4 நிறுவகத்தின் தாபித்தல் மற்றும் நோக்கங்கள்

2014 இன் 3 ஆம் இலக்க இலங்கை புவிச்சரிதவியல் நிறுவனம் (கூட்டிணைத்தல்) அதிகாரச்சட்டத்தின் கீழ் இலங்கை புவிச்சரிதவியல் நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பொதுவான நோக்கங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) புவிச்சரிதவியலுக்கு உரிய அறிவை பெற்றுக்கொள்ளல், விரிவாக்குதல் மற்றும் அறிவை பரிமாறிக் கொள்ளல்.

(ஆ) புவிச்சரிதவியல் விடயங்கள் தொடர்பிலான ஆராய்ச்சி நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.

(இ) வெவ்வேறு தரங்களில் அங்கத்துவத்திற்கு உள்ளடக்குவதற்காக விண்ணப்பத்தாரிகளின் தகைமைகளை பரீட்சித்தல்.

(ஈ) அதன் தொழில்சார் நடவடிக்கைகளை நிர்வகித்தல் மற்றும் வழமையான செயற்பாடுகளை உயர்தரத்தில் பேணுவதற்கு நிதி உதவியளித்தல்.

(உ) புவிச்சரிதவியல் தொழில்சார் நடவடிக்கைகளுக்குரிய அனைத்து விடயங்களிலும் தொழில்சார் மற்றும் ஒழுக்கமான கொள்கைகள் மற்றும் நியமங்களை மேம்படுத்துதல் மற்றும் பராமரித்துச் செல்லலும் செயற்படுத்தலும்.

(ஊ) புவிச்சரிதவியலாளர்களின் அபிலாசைகள் மற்றும் நிலைமையை முன்னேற்றுதலும் மேம்படுத்துதலும்

(எ) நாட்டின் முன்னேற்றத்திற்கும் அபிவிருத்திக்கும் உரிய செயற்பாடுகளின் போது புவிச்சரிதவியலை அடிப்படையாக கொள்ளல் மற்றும் தொடர்புடைய விடயங்களில் அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு சேவைகளை வழங்குதல், மற்றும்

(ஏ) நிறுவனத்தின் நோக்கங்களை மேம்படுத்துவது தொடர்பில் இலங்கையினதும் ஏனைய நாடுகளினதும் ஒத்த தொழில் துறை நிறுவனங்களுடன் கூட்டிணைப்பை ஏற்படுத்துதல்.

### 1.5 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக ஐந்தொகையின் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்கள் மற்றும் தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் தொடர்பான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் பொதுத்துறையின் நிறுவனமொன்றினால் சமர்ப்பிக்கப்படுகின்ற நிதிக்கூற்றுத் தொகுதியொன்று கொண்டிருக்க வேண்டிய கூறுகளுக்கு இடையே இலங்கை புவிச்சரிதவியல் நிறுவனத்தினால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுத் தொகுதியில் பின்வரும் கூறுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(i) நிதி நிலைமை தொடர்பான கூற்று

(ii) தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று

(iii) காசுப் பாய்ச்சல் கூற்று

(iv) முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய குறிப்புக்கள் மற்றும் ஏனைய விபரமான பதிவுகள்.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| 2014 இன் 3 ஆம் இலக்க இலங்கை புவிச்சரிதவியல் நிறுவனத்தின் (கூட்டிணைத்தல்) அதிகாரச்சட்டம்<br>(அ) 7 ஆம் பிரிவு | நிறுவகத்தின் பொதுச்சபைக் கூட்டமொன்றின் போது வாக்களிக்கும் அங்கத்தவர்களில் மூன்றில் இரண்டிற்கு குறையாத பெரும்பாலான வாக்குகளில் விதிகள் தயாரிக்கப்பட வேண்டுமெனினும், அவை அரச வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென குறிப்பிட்டிருந்த போதிலும் அவ்வாறு தயாரிக்கப்பட்ட விதிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 8 ஆம் பிரிவு | அங்கத்தவர்களின் பெயர், முகவரி மற்றும் ஏனைய அத்தியவசிய தகவல்கள் உள்ளடக்கப்பட்ட அங்கத்தவர் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 253,113 ஆன மிகையாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2014 இன் 3 ஆம் இலக்க இலங்கை புவிச்சரிதவியல் நிறுவன (கூட்டிணைத்தல்) அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் புவிச்சரிதவியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் பிரதான நிறுவனமாக தேசிய அபிவிருத்திக்கு பங்களித்தல் மற்றும் சர்வதேச நிறுவனத்திற்கிடையே சமமான நிலையினை அடைதல் என்பன நிறுவனத்தின் பிரதான நோக்கமாக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது நிறுவனத்தினால் அந் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், ஆண்டின் மொத்த செலவினத்தில் 92 சதவீதம் அதாவது ரூபா 239,700 தொகை ஆண்டுப் பொது சபைக் கூட்டத்தினை நடாத்துவதற்கு செலவிடப்பட்டிருந்தது.